விலை ரூ. 10/=

# ஈழநாடு

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Eelanadu ඊළනාඩු

14.08.2020 வெள்ளிக்கிழமை

## நல்லூர் திருவிழாவில் பக்தர்களின் அளவை கட்டுப்படுத்த வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஓக. 14

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலயப் பெருந்திருவிழாவில் பக்தர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துமாறு தேசிய சுகாதார ஆணையாளர், மாகாண சுகாதார ஆணையாளர் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர் என்று யாழ். மாநகர சபையின்

02

# மாவை-சுமந்திரன் நேற்று மருத்துவர்களுடன் பேச்சு

## நேற்று பின்னிரவு வரை நீடித்தது

யாழ்ப்பாணம், ஓக 14

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் மருத்துவர்கள் குழு ஒன்றுக்கும் இடையே நேற்றிரவு பல மணி நேரமாகப் பேச்சு இடம்பெற்றது.

02

## தேசியப் பட்டியல் ஊடாக பஸில்?



கொழும்பு, ஓக 14

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கவும் அதனை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லவும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பின்னாலும் இருந்து செயற்பட்டவர் பஸில்.

ஆனால், இம்முறை பொதுத்

02

ஞானசார தேரர் நியமன விவகாரம்:

## நீதிமன்றம் செல்கிறது எங்கள் மக்கள் சக்தி!

கொழும்பு, ஓக 14

எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு கிடைத்த தேசியப்பட்டியல் நியமனத்திற்கு ஞானசார தேரரை நியமித்த விவகாரம் கட்சிக்குள் கடும் இழுபறிகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் தீர்வுக்காக நீதிமன்றத்தை நாட உள்ளதாக அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்

02

## 25 அமைச்சுகளுக்கு செயலர்கள் நியமனம்

### வெளிநாட்டலுவல்களுக்கு முன்னாள் கடற்படை அதிகாரி

கொழும்பு, ஓக 14

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசின் அமைச்சரவை நேற்று முன்தினம் நியமிக்கப்பட்ட நிலையில் 25 அமைச்சுகளுக்கான செயலாளர்

02

## ஐ.தே.கவின் தலைமைப்பதவியை ஏற்க கரு ஜயசூரிய பச்சைக்கொடி!

கொழும்பு, ஓக 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்பதற்கு தான் தயார் எனக் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார் என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பொதுத்தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வி

02

## வவுனியா சேமமடுவில் யானைகள் அட்டகாசம்

### இரண்டு வீடுகள் சேதம்!

வவுனியா, ஓக 14

வவுனியா சேமமடுப் பகுதியில் நேற்று அதிகாலை ஊருக்குள் புகுந்த யானைகள் இரண்டு வீடுகளை சேதப்படுத்திச் சென்றுள்ளதுடன், வீட்டில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டி

02



## ஊழல்வாதிகள் சார்பில் ஆஜரான அலி சப்ரி நிதியமைச்சராகலாமா?

### போர்க்கொடி தூக்குகிறது சஜித் அணி

கொழும்பு, ஓக 14

ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியை நீதி அமைச்சராக நியமித்தமைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக அலி சப்ரி கடந்த காலங்களில் பல வழக்குகளில் ஆஜராகினார்

02

## பாடசாலைகளுக்கு கட்டுப்பாடு நீக்கம்

### வழமைபோல் வகுப்பு நடத்த அனுமதி



கொழும்பு, ஓக 14

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 200 க்கும் அதிகமான மாணவர்களை கொண்ட பாடசாலைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வைரஸ் பரவலின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், 200 க்கும் அதிகமான மாணவர்களைக்

02

## செஞ்சோலை படுகொலை நினைவு கூரலுக்குத் தடை!

முல்லைத்தீவு, ஓக 14

செஞ்சோலை படுகொலையின் 14ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வுகளை நடத்த புதுக்குடியிருப்பு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

முல்லைத்தீவு, வள்ளிபுனம்

02



## இனப்படுகொலைக்கான நீதியே நிரந்தர தீர்வுக்கும் வழிவகுக்கும்!

### முள்ளிவாய்க்காலில் விக்னேஸ்வரன் உறுதி

முல்லைத்தீவு, ஓக. 14

"தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும் என்றால் போரில் இறந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதியின் அடிப்படையில்தான் எமக்கான அரசியல் தீர்வு அமையும். இதை நாம் கைவிட்டால் எங்களுக்கு தீர்வு கிடையாது. இறந்த மக்களின் தியாகங்கள்தான் எமக்கு நல்லதொரு தீர்வைத் தரும்."

- இப்படி கூறியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் அக்கட்சியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவானவரும்

02

## இனப்படுகொலைக்கான...

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான க. வி. விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரன் தனது பாராளுமன்ற

## 25 அமைச்சுகளுக்கு...

களுக்கு ஜனாதிபதி நேற்று நியமனம் வழங்கினார்.

அவர்களில் ஏற்கனே பாதுகாப்பு, சுகாதாரம், கமத்தொழில் அமைச்சுகளுக்கு இராணுவ அதிகாரிகள் செயலாளர்களாகப் பதவி வகித்த நிலையில் அவர்களுக்கு மீளவும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் கடற்படை அதிகாரி அட்மிரல் (ஓய்வுபெற்ற) ஜயநாத் கொலம்பகே வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்குச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அமைச்சுகளின் செயலாளர்களில் சிறுபான்மையைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள் எவரும் இடம்பெறவில்லை.

மேலும் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையை சிறப்பாக முன்னெடுத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க சுற்றாடல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் 25க்கும் நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

அவர்களது பெயர் விவரங்கள் பின்வருமாறு.

டப்ளியு.எம்.டீ.ஜே.பெர்ணான்டோ - அமைச்சரவைச் செயலாளர்

ஆர்.டப்ளியு.ஆர்.பேமசிரி - நெடுஞ்சாலைகள் அமைச்சு

எஸ்.ஆர். ஆடிகல - நிதி அமைச்சு

ஜே.ஜே.ரத்னசிறி - அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

ஜகத் பீ. விஜேவீர - வெகுசன ஊடக அமைச்சு

ரவீந்திர ஹேவாவிதாரன - பெருந்தோட்டத்துறை அமைச்சு

டீ.எம். அனுர திசாநாயக்க - நீர்ப்பாசன அமைச்சு

டப்ளியு..ஏ சூலாநந்த பெரேரா - கைத்தொழில் அமைச்சு

திருமதி. வஸந்தா பெரேரா - மின்சக்தி அமைச்சு

எஸ்.ஹெட்டியாரச்சி - சுற்றுலா அமைச்சு

ஆர்.ஏ.ஏ.கே. ரணவக - காணி அமைச்சு

எம்.பீ.டீ.யு.கே. மாபா பதிரன - தொழில் அமைச்சு

திருமதி. ஆர்.எம்.ஐ. ரத்னாயக்க - கடற்றொழில் அமைச்சு

14.மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன - பாதுகாப்பு அமைச்சு

எம்.கே.பீ. ஹரிஷ்சந்திர - வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

என்.பீ.மொன்டி ரணதுங்க - போக்குவரத்து அமைச்சு

கலாநிதி பிரியத் பந்து விக்ரம - நீர்வழங்கல் அமைச்சு

திருமதி. ஜே.எம்.பீ. ஜயவர்தன- வர்த்தக அமைச்சு

மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்ஹ - சுகாதார அமைச்சு

மேஜர் ஜனரால் (ஓய்வுபெற்ற) ஏ.கே சுமேத பெரேரா - கமத்தொழில் அமைச்சு

அனுராத விஜேகோன் - இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு

திருமதி. கே.டீ.ஆர் ஒல்கா - வலுசக்தி அமைச்சு

அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஜயநாத் கொழும்பகே - வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

மருத்துவர் அனில் ஜாசிங்க - சுற்றாடல் அமைச்சு

பேராசிரியர் கபில பெரேரா - கல்வி அமைச்சு

சிறிநிமல் பெரேரா - நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சு

அரசியல் பிரவேசத்தை நேற்றைய தினம் தமிழினப் படுகொலையின் குறியீட்டு இடமான முள்ளிவாய்க்கால் மண்ணில் உறுதியேற்று ஆரம்பித்தார். அவரின் இந்த உறுதியேற்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உறுதிப் பிரமாணம் முடிவடைந்த பின்னர் விக்னேஸ்வரனிடம் ஊடகங்கள் கேள்விகளை எழுப்பின. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு

முள்ளிவாய்க்கால் எங்கள் விடுதலைப் போராட்டத்தின் சின்னம். இங்குதான் எமக்கு எதிரான இனப்படுகொலை நடந்தது. தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்க வேண்டும் என்றால் இறந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதியின் அடிப்படையில்தான் எமக்குரிய அரசியல் தீர்வு அமையும்.

## ஐ.தே.கவின்...

யின் பின்னர் கட்சி தலைமைப்பதவியை துறப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார். இதனையடுத்து தலைமைப் பதவிக்காக அந்தக் கட்சிக்குள் கடும் போட்டி நிலவுகின்றது.

இந்நிலையில் ஐ.தே.கவின் தலைமைப் பதவியை ஏற்குமாறு கரு ஜயசூரியவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பையே அவர் ஏற்றுள்ளார் எனத் தெரியவருகின்றது.

## தேசியப் பட்டியல்...

தேர்தலில் அவர் போட்டியிடவில்லை என்பதுடன் தேசியப் பட்டியல் ஊடாகவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை.

இவர் ஏன் நாடாளுமன்றம் செல்லவில்லை என்ற சந்தேகம் பலராலும் எழுப்பப்பட்டது.

காரணம் இவர் இட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டவர் என்பதனாலேயே தேர்தலில் போட்டியிடவோ அல்லது தேசியப்பட்டியலில் உள்வாங்கப்படவோ இல்லை.

எவ்வாறாயினும் விரைவில் அவர் இரட்டைப் பிரஜாவுரிமையை இல்லாது செய்யவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர் அவ்வாறாக இரட்டைப் பிரஜாவுரிமையை இல்லாது செய்யும் பட்சத்தில் சட்டச் சிக்கல்கள் எதுவுமின்றி நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடியும்.

இவர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லும் பட்சத்தில் முக்கிய அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

## நல்லூர்...

சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ரி.பாலமுரளி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த விடயங்கள் வருமாறு,

நல்லூர் பெருந்திருவிழா நடவடிக்கைகளை, சுகாதார வழிமுறைகளுடன், மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பக்தர்களுடன் முன்னெடுக்குமாறு, சுகாதார பணிப்பாளர் நாயகம் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

தொற்று நோய் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி, பக்தர்கள் ஆலய சூழலில் கூடும் சந்தர்ப்பத்தில், தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, எதிர்வரும் தினங்களில், இறுக்கமான சுகாதார கட்டுப்பாடுகள் விதிமுறைகள் என்பவற்றை மீறி, சமூக விலகலை பொருட்படுத்தாமல் செயற்படுபவர்களுக்கு எதிராக, தனிமைப் படுத்தலும் நோய்த் தடுப்பும் சட்டத்தின் கீழ், நடவடிக்கை எடுக்க வேண்டிய துரதிர்ஷ்ட நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

அதனால், அனைவரையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு, யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், தயவுடன் அறிவுறுத்தியுள்ளனர் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதை நாம் கைவிட்டோமானால் எங்களுக்கு தீர்வு கிடையாது. இறந்த மக்களின் தியாகங்கள்தான் எமக்கு நல்லதொரு தீர்ப்பைக் கொண்டு வரப்போகிறது.

தற்போதைய அரசாங்கம் எல்லாவிதத்திலும் இராணுவ நிர்வாகத்தைக் கொண்டுவர எத்தனிக்கிறது - கொண்டு வந்து விட்டது என்றும் சொல்லலாம். ஆனால், அதற்காக எங்களின் உரிமை - தாயகம் என்ற எண்ணங்கள் அழிந்து விடாது - தேய்ந்து விடாது. அது இன்னும் இன்னும் எங்கள் மக்களின் போராட்ட எண்ணத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்கும். இந்த மண்ணிலே நடந்தவை பற்றி அரசாங்கம்தான் மனம் வருந்த வேண்டும். அந்த மனவருத்தத்தின்

## நீதிமன்றம்...

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் அதிகாரபூர்வமாக ஒப்பந்தத்தின் ஊடாக தேசியப் பட்டியல் உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் பிரச்னையை தீர்த்துக் கொள்வதற்காக வெவ்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் காரணமாக நீதிமன்றம் சென்று பிரச்னையை தீர்த்துக் கொள்ளுதல் பொருத்தமான ஒரே நடவடிக்கையாக இருக்கும்.

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் செயலாளராக கூறப்படும் வெதினிகம விமல திஸ்ஸ தேரரால் இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கோரி தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டபோதும், நெருக்கடிக்கு மத்தியில் ஞானசார தேரர் பெயரிடப்பட்டுள்ளமையினால் பல பிரச்னைகள் உருவெடுததுள்ளன- என்றார்.

## வவுனியா...

ருந்த நெல்லையும் உண்டுவிட்டுச் சென்றுள்ளன.

சேமமடு கிராமத்தில் தொடர்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதுடன் இதனால் பயிர்ச்செய்கை உட்பட ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியமால் இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். நீண்ட காலமாக தொடர்ந்து வருகின்ற இந்தப் பிரச்னையை நிவர்த்தி செய்து யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, சேமமடுப் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி கடந்த வருடங்களில் ஒருவர் சாவடைந்திருந்ததுடன், ஒருவர் காயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மாவை - சுமந்திரன்...

யாழ். புறநகர் பகுதியில் உள்ள வைத்தியர் ஒருவருக்குச் சொந்தமான விடுதியில் சுமார் 3 மணித்தியாலத்தும் மேலாக நடந்த இந்தச் சந்திப்பு, நேற்று இரவு 10 மணியைத் தாண்டியும் நீடித்தது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு எதிராகச் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டார் எனச் சுமந்திரன் தரப்பினர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மாவை சேனாதிராசாவை அவரது வீட்டில் சந்தித்து பேசிய வைத்தியர் குழு ஒன்று, நேற்று அவரை நேரடிப் பேச்சுக்கு அழைத்திருந்தது.

கச்சேரிக்கு அண்மையிலுள்ள வைத்தியர் ஒருவரின் விடுதியில் பேச்சு என மாவை சேனாதிராசா அழைக்கப்பட்டிருந்தார். அங்கு எம்.ஏ.சுமந்திரனும் பிரசன்னமானார்.

மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், மருத்துவபீடாதிபதி ரவிராஜ் மற்றும் சில வைத்தியர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

ஆயினும் பேச்சில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் என்ன என்பது குறித்து நேற்றிரவு உடனடியாக அறியமுடியவில்லை.

அடிப்படையில் தமிழினத்துக்கு நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும் - என்றார்.

மேலும், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் அவரிடம் வினா எழுப்பப்பட்டது.

இராணுவப் பின்னணி கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக வந்தால் அடுத்த நாளே அவர் ஜனநாயகத்திற்கு திரும்பி விடுவார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அந்தப் பின்னணியைக் கொண்டவாறுதான் அவரது நிர்வாகமும் அமையும். அதற்கேற்றவாறுதான் அவர் செயற்படுகின்றார். இராணுவ ஆட்சி என்று கூறாமலே அத்தகைய ஆட்சியை ஏற்படுத்துகின்றார். ஹிட்லர்கூட இப்படியாகத்தான் முதலில் பதவிக்கு வந்தார் - அதிகாரத்தைக் கைப்பற்றினார். அதன் பின்னர்தான் சர்வாதிகாரியாக மாறினார். ஆகவே சர்வாதிகாரத்துக்குரிய சகல தகைமைகளையும் நாம் இவர்களிடத்திலே காண்கிறோம். ஆனால் அதற்காக நாம் பயந்தோ - சளைத்தோ விட்டோம் என்று அர்த்தமில்லை. எங்களுடைய வேலைகளை நாம் செய்து கொண்டே போவோம். இதனை உலகறியச் செய்ய வேண்டும். உலகம் இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதன் காரணத்தால் எங்களுக்கான தீர்வு கிட்ட வேண்டும் - என்றார்.

## பாடசாலைகளுக்கு...

கொண்ட பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளிக்கவேண்டிய தினம் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பாடசாலைகளை வழமை போல் நடத்த முடியுமானால் வழமை போல் மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைத்துக் கொள்ளவதில் தடையில்லை எனக் கல்வி அமைச்சு பாடசாலைப் பிரதானிகளுக்கு அறிவித்துள்ளது.

## ஊழல்வாதிகள்...

என ஐக்கிய மக்கள் சக்தியின் செய்தி தொடர்பாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அலி சப்ரி ஒரு முஸ்லிம் என்பதால் தாம் எதிர்க்கவில்லையென்றும், அவர் முஸ்லிமாக இருப்பதால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறினார்.

பிரச்சினை என்னவென்றால், அலி சப்ரி ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான பல நபர்களுக்காக ஆஜரானார். இப்போது அவர் நீதி அமைச்சராக உள்ளார். இது உண்மையில் பயமாக இருக்கிறது” என்று ஹரின் பெர்னாண்டோ கூறினார்.

ஜனாதிபதியின் ஆலோசகரான அலி சப்ரி நேற்று முன் தினம் புதிய நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அலி சப்ரி பெரமுனவின் தேசியப்பட்டியல் எம்.பி என்பது குறிப்பிடத்தக்கது.

## செஞ்சோலை...

பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த தினத்தை நினைவு கூர்ந்து வருடந்தோறும் வள்ளிபுனம் இடைக்கட்டுச் சந்தியில் நினைவேந்தல் குழுவால் நினைவுகூரல் நிகழ்வுகள் நடத்தப்படும்.இம்முறையும் இன்று காலை நினைவுகூரல் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து, ஏற்பாட்டாளர்களான ஈசன் மற்றும் ரூபன் ஆகியோரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த புதுக்குடியிருப்புப் பொலிஸார், நினைவுகூரல் நிகழ்வுகளை நடத்த முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த உத்தரவை மீறி நிகழ்வை நடத்தினால் கைது செய்யப்படுவீர்கள் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்ததாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu
14.08.2020 வெள்ளிக்கிழமை
சார்வரி, ஆடி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## யார் - தப்பி பிழைக்க முடியாது?

தமிழ் மக்களுக்கு விரைந்து அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இனித் தப்பிப்பிழைக்க முடியாது. இவ்வாறு கூறியிருக்கின்றார் கூட்டமைப்பின் தலைவராக அறியப்படும் இரா.சம்பந்தன். திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில், இம்முறை மிகவும் நெருக்கடியான நிலையிலேயே சம்பந்தன் வெற்றி பெற்றிருந்தார். ஒப்பீட்டடிப்படையில் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிட்டால் திருகோணமலையில் தமிழ் வாக்குகளை பிரிக்கக் கூடிய கட்சிகள் பலவீனமாக இருந்தன. விக்னேஸ்வரன் தலைமையில் போட்டியிட்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணியில், விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஒருவர் போட்டியிட்ட போதிலும் கூட, அவரால் மிகச் சொற்ப வாக்குகளையே பெற முடிந்தது. அதே போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினாலும் மிகச் சொற்ப வாக்குகளையே பெற முடிந்தது. இவ்விரு கட்சிகளும் நிறுத்திய வேட்பாளர்கள் மிகவும் பலவீனமானவர்களாகவும், மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியாதவர்களாகவும் இருந்தனர். இதன் காரணமாகவே தமிழ் அரசு கட்சியின் மீதான அதிருப்தி வாக்குகள் பெருமளவு சிதறவில்லை. மேலும் ஒரு குறிப்பிட்ட வயதிலிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த இருபது வருடங்களாக சம்பந்தனுக்கு வாக்களித்து வருபவர்கள். அவ்வாறானவர்களின் வாக்குகளால் சம்பந்தன் தப்பிக் கொண்டார். ஆனாலும், கடந்த முறை 33,000 விருப்பு வாக்குகளை பெற்றிருந்த சம்பந்தன், இம்முறை 21,000 வாக்குகளையே பெற்றிருந்தார். உண்மையில் அரும்பொட்டில் சம்பந்தன் தோல்வியிலிருந்து தப்பிக் கொண்டார். இந்த நிலையிலிருக்கும் சம்பந்தன், மிகவும் பலமான நிலையிலிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு தப்பிப் பிழைக்க வழி கூறுகின்றார்.

கூட்டமைப்பு மிகவும் மோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றது. ஆனால், அந்த தோல்விக்கான காரணங்களை வழமைபோல் அரசாங்கத்தின் மீதும், ஏனைய கட்சிகள் மீதும் போட்டுவிட்டு தப்பிக்கொள்ளவே சம்பந்தன் முற்படுகின்றார். கடந்த இரண்டு தேர்தல்களின் போதும் கூட்டமைப்பிற்கு வாக்களித்திருந்த மக்கள் ஏன் இம்முறை வேறு கட்சிகளை நோக்கிச் சென்றனர்? அதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை? தேர்தல்களின் போது பல கட்சிகளும் பல்வேறு சலுகைகளை வழங்குவதுண்டு. அப்போதெல்லாம் மக்கள் அந்தக் கட்சிகளுக்கு வாக்களிக்கவில்லையே - இந்த முறை ஏன் வாக்களித்தனர்?

தன்னுடைய கட்சியைக் கூட பாதுகாக்க முடியாமல் இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவை நம்பி, ஐந்து வருடங்களை வீணாக்கியதுடன், இந்தக் காலத்தில் அரசாங்கத்தின் அங்கமாக செயற்பட்டு, இலங்கையின் மீதான சர்வதேச அழுத்தங்களை நீர்த்துப் போகச் செய்ததன் விளைவாகவே, கூட்டமைப்பு இவ்வாறானதொரு தோல்வியை சந்திக்க நேர்ந்தது. வாக்களித்த மக்கள் கூட்டமைப்பிடமிருந்து எதனை எதிர்பார்த்தார்களோ அதிலிருந்து கூட்டமைப்பு அதிக தூரம் விலகிச் சென்றதன் காரணமாகவே, கூட்டமைப்பிலிருந்து மக்களும் விலக நேர்ந்தது. ஏனெனில் கூட்டமைப்பிலிருந்து மக்கள் எதிர்பார்ப்பது வெறும் வீதிப் புனரமைப்பு, வடிகால்கள் திருத்தம் மட்டுமல்ல. அதற்கு மேலும் மக்கள் பல விடயங்களை கூட்டமைப்பிடமிருந்து எதிர்பார்த்தனர். அவர்களது வெளிக்காட்டாத கோபம், உரிமைசார் தாகம் என்பவற்றை பிரதிபலிப்பதிலிருந்து கூட்டமைப்பு அதிகம் விலகிப்போனது.

இதன் காரணமாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாக்கு வங்கி அதிகரித்தது. விக்கினேஸ்வரன் முதல் தடவையிலேயே வெற்றிபெற முடிந்தது. கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கான சரியான காரணங்களை இனம்காண முடியாவிட்டால், இனிவரும் காலத்திலும் கூட்டமைப்பு கடுமையான பின்னடைவுகளையே சந்திக்க நேரிடும். மிகவும் தளர்ந்து போய்விட்ட, சம்பந்தனால் இவற்றை விளங்கிக்கொள்ள முடியாமல் போகலாம். ஆனால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இவற்றை விளங்கிக்கொண்டு, தங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்களை தேடா விட்டால், அடுத்து வரவுள்ள மாகாண சபைத் தேர்தலில் பங்காளிக் கட்சிகள் தப்பிப்பிழைப்பது மிகவும் கடினமாவிடும்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விவரம்

கொழும்பு, ஓக 14

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் இறுதிப் படுத்தப்பட்டுவிட்டதாக அறியமுடிகின்றது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் 27 லட்சத்து 71 ஆயிரத்து 980 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு ஏழு தேசியப் பட்டியல் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

இந்நிலையில் உறுதியளிக்கப்பட்டவாறு தமது கட்சிகளுக்கு தேசியப்பட்டியல் ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் தலைவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், தமது அணியில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் முடிவிலேயே சஜித் இருந்தார். இதனால் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டது.

இதனையடுத்து தேசியப்பட்டியல் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தேசியப்பட்டியல் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1) ரஞ்சித் மத்துமபண்டார - ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர்
2) ஹரின் பெர்னாண்டோ - தேசிய அமைப்பாளர்
3) இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்
4) திஸ்ஸ அத்தநாயக்க
5) ஏரான் விக்கிரமரத்ன
6) மயந்த திஸநாயக்க (நவீன் திஸநாயக்க வின் தம்பி)
7) டயானா கமகே

# நான் கிரிக்கெட்டுக்காக மட்டுமே நியமிக்கப்பட்ட அமைச்சர் அல்லன்

*நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்*

கொழும்பு, ஓக 14

தான் கிரிக்கெட்டுக்காக மட்டும் நியமிக்கப்பட்ட அமைச்சர் அல்ல என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கண்டியில் உள்ள தலதா மாளிகையில் நேற்று முன் தினம் அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியில் தற்போது தோன்றியுள்ள நெருக்கடிக்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என அவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், பலரும் கிரிக்கெட்டின் மறுமலர்ச்சியில் கவனம் செலுத்தினாலும் நான் கிரிக்கெட்டுக்கு மட்டும் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சர் மட்டும் அல்லன் என்பதனை முதலில் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நான் அனைத்து விளையாட்டுக்களுக்கும் நியமிக்கப்பட்ட ஒரு அமைச்சர்.

கிரிக்கெட்டுக்குத் தனியாகக் கவனிக்கும் குழு உள்ளது. முன்னாள் வீரர்களுடன் கலந்தாலோசித்து கிரிக்கெட் விளையாட்டை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

# கற்பிட்டியில் சிக்கிய மஞ்சள்

கொழும்பு, ஓக 14

கற்பிட்டி - பள்ளிவாசல்துறை கடற்பிராந்தியத்தில் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகை மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பைகளில் பொதியிடப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.


இதன்போது, 800 கிலோகிராமுக்கும் அதிகமான மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவை இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மஞ்சள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளுக்காக, கைப்பற்றப்பட்ட மஞ்சள் தொகையை சுங்கத்திடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# சஜித்துடன் வைத்த கூட்டை உடைக்க விரும்பவில்லை!

## பின்வாங்கினார் மனோ கணேசன்



கொழும்பு, ஒக 14

தேசியப் பட்டியல் விவகாரத்தால், ஐக்கிய மக்கள் சக்தியை உடைக்க விரும்பவில்லை. இது தொடர்பில் சஜித் எடுக்கும் தீர்மானத்துக்கு இணங்குவதாக முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ரமடான் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியை நாமே உருவாக்கினோம். அந்தக் கூட்டணியோடு நாம் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியிருக்கிறது. அதனால் சில விடயங்களை நாம் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தேசியப் பட்டியல் விவகாரத்தால் எமது பிரதான நோக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சி இப்போது இல்லை. ஐக்கிய தேசிய கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவார்கள். ஐக்கிய மக்கள் சார்பில் போட்டியிட்ட கூட்டணியினருக்கு தமிழர்கள் அல்லாத முஸ்லிம், சிங்களவர்களும் வாக்களித்திருக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பிரதான கூட்டணி தமிழ் முற்போக்குக் கூட்டணியே. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெறும் இரண்டு எம்.பிகளையே பொதுத்தேர்தலில் பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு 6 எம்.பிகள் கிடைத்துள்ளனர் - என்றார்.

# ஐ.தே.க தலைமைப் பதவிக்கு ருவன், நவீன், பாலித போட்டி!

கொழும்பு, ஒக 14

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் யாருக்கு என்பது தொடர்பில் நேற்று முன் தினம் அறிவிக்கப்பட இருந்தபோதிலும் இறுதித் தீர்மானத்துக்கு வர முடியவில்லை எனக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்துக்கு கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம், உப தலைவர் ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன மற்றும் தயா கமகே ஆகியவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக நேற்று முன்தினம் ரணில் விக்ரமசிங்க தலைமையில் அவரது கொள்ளுப்பிட்டி வீட்டில் ஒன்றுகூடியிருந்தனர். இருப்பினும் இறுதித் தீர்மானத்துக்கு வர முடியவில்லை எனக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் தலைமைத்துவத்துக்கு கட்சியின் தேசிய ஒருங்கமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, பிரதிப் பொதுச் செயலாளர் ருவன் விஜேவர்தன மற்றும் பாலித ரங்கே பண்டார ஆகியவர்களின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# ஹெரோயினுடன் தாய், மகன் கைது

கொழும்பு, ஒக. 14

ஹெரோயின் போதைப் பொருளை கடத்திச் சென்ற தாய், மகனை கொழும்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பு ஆனந்தா மாவத்தையில் இருந்து 800 கிராம் ஹெரோயினை கடத்தி சென்றபோது பிதகோட்டே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதானவர்கள் 42 வயதுடைய தாயும், 19 வயதுடைய மகனும் ஆவர். அத்துடன் இவர்களிடம் இருந்து 70 இலட்சம் ரூபாவும், கார் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# 50,000 இலங்கையர்களை நாட்டுக்கு அழைக்க ஏற்பாடு

கொழும்பு, ஒக 14

கொவிட்-19 தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் சிக்கியுள்ள 50ஆயிரம் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்குள் அழைத்துவரும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 19ஆயிரம் பேர் நாடு திரும்பியுள்ளனர்.

93 நாடுகளில் இருந்து இலங்கையர்கள் இதுவரை நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்று நோய், அதனால் ஏற்பட்ட வேலை இழப்பால் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள 50 ஆயிரம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இலங்கைக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்து பதிவு செய்து காத்திருப்பதாகவும் அவர்கூறினார்.

முன்னதாக, கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் ஏற்பட்ட கொத்துத் தொற்று நோய் மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை இரண்டு முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இலங்கையர்களை வெளிநாடுகளில் இருந்து அழைத்துவருவதற்கான விமான ஏற்பாடுகளை அரசு செய்யவுள்ளதாகவும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கூறினார்.

எனினும் இலங்கை மற்றும் பிற நாடுகள் எதிர்கொள் ளும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அகதிகளை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான சரியான கால எல்லை இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் ஜயநாத் கொலம்பகே கூறினார்.

# கொழும்பு - ஷங்காய் விமான சேவைகள் 4 வாரங்கள் நிறுத்தம்

கொழும்பு, ஒக 14

சீனாவின் ஷங்காய் நகருக்கு அண்மையில் விமானத்தில் பயணம் செய்த பல பயணிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகி உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து கொழும்பு- ஷங்காய் இடையிலான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கான விமான சேவைகள் இடைநிறுத்தப்படவுள்ளதாக சீனாவின் சிவில் விமான ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது.

எத்திஹாட் ஏர்வேஸ் மற்றும் சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸின் விமான சேவைகளுக்கான தடை ஒகஸ்ட் 17 ஆம் திகதி முதல் ஒரு வாரம் அமுலில் இருக்கும்.

அதேவேளை கொழும்பு - ஷங்காய் இடையிலான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் நான்கு வாரங்களுக்கு இடைநிறுத்தப்படும் எனவும் சீனா சிவில் விமான ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது.




# கல்முனையில் பி.சி.ஆர்.பரிசோதனை

அம்பாறை, ஒக 14

கொரோனா வைரஸ் சமூக மட்டத்தில் பரம்பலடைவதை தடுப்பதற்காக பரிசோதனைகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி. சுகுணனின் வழிகாட்டல்களுக்கமைய சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 18 பேருக்கு கொரோனா வைரஸ் தொடர்பில் பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகள் பொலிஸ் நிலைய வளாகத்தில் பெறப்பட்டன.

இதன்போது நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஜே.மதன் மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கோழிகள், முட்டைகளுக்கும் இந்த அரசில் அமைச்சர்கள்!

## ரவூப் ஹக்கீம் கிண்டல்



கொழும்பு, ஒக 14

கோழிகள், முட்டை மற்றும் கழிப்பறைகளுக்கு இப்போது அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு பெரிய நகைச்சுவை என நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரி வித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட நீதி அமைச்சர் அலி சப்ரி இந்த பதவிக்கு பொருத்தமான வேட்பாளர் என்றும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

அமைச்சர்கள் நியமனத்தின் போது அமைச்சர்கள் பிரிக்கப்பட்ட விதம் குறித்து தாம் திருப்தி அடையவில்லை என வும் அவர் தெரிவித்தார்.

# கல்முனை பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் போராட்டம்



மட்டக்களப்பு, ஒக 14

கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்துள்ளனர்.

கல்முனை மாநகர முதல்வரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கல்முனை பிரதேச செயலகத்தில் இருந்து ஊர்வலகமாக கல்முனை பொலிஸ் நிலையம் வரை சென்று கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை சந்திக்க முற்பட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றி ஊர்வலமாகச் சென்ற உத்தியோகத்தர்களை அணுகிய பொறுப்பதிகாரி எச்சரிக்கை செய்த பின்னர் திருப்பி அனுப்பினார்.

கல்முனை மாநகர சபை மற்றும் கல்முனை பிரதேச செயலகம் ஆகியவை ஒரே வளாகத்தில் காணப்படுவதுடன் ஒரே நுழைவாயிலையே இரு அலுவலகங்களின் உத்தியோகத்தர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வளாகத்தில் நின்ற ஒரு பாரிய மரத்தை வெட்டியமைக்காக பிரதேச செயலக உத்தியோகத்தர்களை அநாகரீகமான வார்த்தைகளால் திட்டினார் என மாநகர சபை முதல்வர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.



# எந்த சவாலையும் முறியடிப்போம்!

## சுகாதார அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, ஓக 14

கொரோனா வைரஸ் தொற்று சமூகத்தினுள் பரவுவதைத் தடுக்க முடிந்ததைப் போன்று எதிர்வரும் காலங்களிலும் எவ்வகையான சவால்கள் ஏற்பட்டாலும் அவற்றை முறியடித்து வெற்றி பெற முடியும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று உத்தியோகபூர்வமாகக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பின் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்துக்கு அமைய நோயாளர்கள் இல்லாத நாட்டை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இதற்கான செயற்பாடுகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

எனது அரசியல் பயணத்தில் 16 வருடங்கள் அமைச்சராக கடமையாற்றியிருக்கின்றேன்.

ஐக்கியத் தேசியக் கட்சியால் எம்மீது சிறு குற்றச்சாட்டைக் கூட முன்வைக்க முடியாது. அதேபோன்று எதிர்வரும் காலங்களிலும் மிகச் சிறந்த வகையில் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். நாம் மிகவும் தூய்மையான அரசியலில் ஈடுபடுபவர்கள்.

கொரோனா வைரஸ் தீவிரமடைந்த காலப்பகுதியில் நாம் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டோம். நாம் எதிர்பார்த்ததைப் போன்று தென் ஆசியாவிலும் சில சந்தர்ப்பங்களில் உலகளாவிய ரீதியிலும் முன்னோடியான ஒரு நாடாக இலங்கை திகழும் வகையிலான வேலைத்திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப்பட்டன.

இதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் வழிகாட்டலில் செயற்பட்டதால் மரணத்திலிருந்து மக்களை பாதுகாக்க முடிந்துள்ளது.

சமூகத்தினுள் கொரோனா பரவல் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று அனைத்து சவால்களையும் முறியடித்து எம்மால் வெற்றி பெற முடியும் - என்றார்.

# தாயகத்தில் முதலீடு செய்ய முன்வருமாறு புலம்பெயர்ந்தோருக்கு டக்ளஸ் அழைப்பு

கொழும்பு, ஓக 14

நாட்டில் நிலையான அரசு உருவாகியுள்ள நிலையில் புலம்பெயர் மக்கள் தங்கள் தாயகப் பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றும் அதற்கான உத்தரவாதத்தைத் தான் வழங்குவார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று வியாழக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஆர்வம் செலுத்தியபோதிலும் சரியான வரவேற்பு கிடைத்திருக்கவில்லை.

இடைத் தரகர்கள் சிலர் தங்கள் குறுகிய நலன்களுக்காக புலம்பெயர் முதலீட்டாளர்களை தவறாகப் பயன்படுத்த முயற்சித்திருந்தனர்.

ஆனால் தற்போது நிலையான அரசு உருவாகியுள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தவறான செயற்பாடுகள் எவற்றையும் அனுமதிப்பது இல்லை என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

இந்நிலையில், அற்கான உத்தரவாதத்தை என்னால் வழங்கமுடியும்.

அதேவேளை, வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் புலம்பெயர் முதலீடுகள் அதிகரிக்கும் பட்சத்தில், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அபிவிருத்தி மற்றும் அன்றாடப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்துக் கொள்ள முடியும். புலம்பெயர் முதலீட்டாளர்கள் தமக்கிருக்கும் தார்மீக கடமையை உணர்ந்து முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

# ரணிலுடன் பேசுவதற்கு சஜித் அணியினர் தயார்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதன் பின், பேச்சுக்கு தயார் என அந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி யில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயலாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படுமானால் அதற்கு எமது தரப்பும் தயாராகவுள்ளது.

அனைவரது கருத்துக்களையும் இணைத்து கொண்டு பயணிப்பது அவசியமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியிடம் கருத்துகள் மற்றும் தீர்மானங்கள் காணப்படுமாயின் தாம் அதனைச் சிறந்த ஒரு விடயமாக நோக்குவதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் பொறுப்புக்களை வழங்குதல் மற்றும் எதிர்காலம் குறித்து கலந்துரையாடித் தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



# ரஷ்ய பிரஜைக்கு தொற்று இல்லை

மன்னார், ஓக 14

மன்னாரில் கைதுசெய்யப்பட்ட ரஷ்யப் பிரஜைக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவரை சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காலாவதியான விஸாவுடன் சட்ட விரோதமாகத் தங்கியிருந்த ரஷ்யப் பிரஜை கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

அவருக்கு கொரோனா தொற்று தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நேற்று அந்த அறிக்கை மன்னார் நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் பிரகாரம் அவருக்கு கொரோனா தொற்று இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவரை ரஷ்யாவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி எஸ்.டினேசனினால் மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், ரஷ்யப் பிரஜை சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

# மாகாண சபை தேர்தலிலும் தொலைபேசியில் போட்டி

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளவர்களும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்ள முடியும் என்று தெரிவித்துள்ள அவர், ஊழல்வாதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றும் கூறினார்.

# அமைச்சுகளுக்கு கோட்டாபய விடுத்த கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, ஓக 14

கூட்டுதாபனங்கள், சபைகள், அரசமைப்புச் சபை ஆகியவற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் பதவிகளில் மாற்றம் மேற்கொள்ளப்படாது என ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி செயலாளர் பீ.பி.ஜயசுந்தர எழுத்து மூலம் இது குறித்து அறிவித்துள்ளார்.

அரச கூட்டுதாபனங்கள், சபைகள், அரசமைப்புச் சபை ஆகியவற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் பதவிகளில் மாற்றம் மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்கு ஜனாதிபதியின் இணக்கப்பாடு அவசியம் எனவும் அவர் அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் இந்த நிறுவனங்களுக்கான தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை விசேட குழுவொன்றின் பரிந்துரைக்கு அமையவே நியமிக்கப்பட்டது.

அதனால் அதில் மாற்றம் ஏற்படுத்தாது அவர்களைத் தொடர்ந்தும் கடமையாற்ற அனுமதிக்கவேண்டும் என ஜனாதிபதி செயலாளர் அந்தக் கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் சகல அமைச்சுக்களினதும் கடமைகளை ஆரம்பிக்குமாறு புதிதாக பொறுப்பேற்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கூடிய விரைவில் இந்த நடவடிக்கையை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# தேர்தலுக்கு பின் நாட்டில் அமைதி

கொழும்பு, ஓக 14

தேர்தலுக்கு பின்னரான காலம் அமைதியாக உள்ளதாக கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

2020 நாடாளுமன்றத் தேர்தல் நிறைவு பெற்று ஒரு வாரம் ஆகியுள்ள நிலையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின் அடிப்படையில் அந்தக் காலப்பகுதி அமைதியானது என கபே அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் கபே அமைப்புக்கு 39 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும் அவை பாரதூரமான விடயங்கள் அல்லவெனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இவ்வாறு தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளில் கணிசமானவை தேர்தல் சட்டதிட்டங்களை மீறி வாகன அணிவகுப்புகள் இடம்பெற்றமை தொடர்பாகவே இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

செய்திகள் |

தயாளன்

# தேசியத்தை பலப்படுத்த தவறிய தேசியப் பட்டியல் விவகாரம்



தேசியப் பட்டியல் உறுப்பினர் என்ற விடயம் குறிப்பிட்ட இனங்களின், தேசியத்தின் நலன் என்பதை விட சொந்தக் கட்சிகளின் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் மருந்தாகவே உள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருந்தாலும் சரி. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தலைமைக்குக் குழி பறிக்கும் வாய்ப்பாகக் கருதுகின்றனர் சுமந்திரனும் சிறிதரனும்.

2020 இலிருந்து "சுமந்திர ஜனநாயகம்" என்பது அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

'சுத்தமான சூசைப்பிள்ளை' சுமந்திரன், கட்சியின் தலைமை மிகமோசமாகத் தோற்றுவிட்டது அதனை அகற்றியே ஆகவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தலைகீழாக உள்ளார். 2004 இல் 75 கள்ள வாக்குப் போட்டதாக கூறும் சிறீதரன் கட்சிக்குப் பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளதே எனக் கண்ணீர் வடிக்கிறார். அவரும் தலைமையை மாற்ற வேண்டுமாம். மாவையின் ஆளுமை எந்தளவு என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவரது வரலாற்றை ஆராய்ந்தால் காசி ஆனந்தனுக்கு அடுத்தபடியாக அவரது பெயரே உச்சரிக்கப்பட்டது. தந்தை செல்வா முதற்கொண்டு பிரபாகரன் முதலானோருடன் தொடர்புபட்டவர். கொழும்பு நாலாம் மாடி முதல் மட்டக்களப்பு முதலான சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர். இலங்கை அரசியலில் தந்தை செல்வா, ஜீ. ஜீ, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மட்டுமல்ல சம்பந்தன் ஐயாவும் இரு தடவைகள் தோற்றவர் தான். சுமந்திரனின் மொழியில் சொன்னால் மிக மோசமான தோல்வி.

1981 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை நினைவூட்டுகிறது 2020 பொதுத்தேர்தல். இதன் முடிவுகளை விலாவாரியாக எழுத முற்பட்டால் நாங்கள் ஆயிரம் கோடி பெறுமதிமிக்க மனிதர்களாக உயர்ந்து விடுவோம். அவ்வளவு தொகை நஷ்டஈடு கேட்பதென்றால் அத்தகைய பெறுமதியைக் கட்டக்கூடியவராக எழுதுபவர் இருக்கிறார் என்பதே அர்த்தம். அதுவும் ஒருவகை கௌரவம்தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் பிரதிநிதித்துவம் இழந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் சுமந்திரனே என அறுதியிட்டுக் கூறலாம். கல்முனை உபபிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் விவகாரம் தமிழரைப் பொறுத்தவரை ஓர் உணர்வுபூர்வமான விடயம். இது சாகும் வரை உண்ணாவிரதம் என்றளவுக்குப் போனது. திருமண வீடென்றால் தான்தான் மாப்பிள்ளை சாவீடென்றால் தான்தான் பிணம் என்ற நினைப்பிலுள்ள சுமந்திரன். குறிப்பிட்ட சில நாட்களுக்குள் இப்பிரச்னைக்குத் தீர்வு வழங்கப்படும் எனப் பிரதமர் ரணிலின் சார்பில் உறுதிமொழி வழங்கினார்.

அரசில் கூட்டமைப்பு அங்கம் வகிக்கவில்லை. இவ்வாறான உறுதிமொழியை அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒருவரே பிரதமரின் சார்பில் வழங்கியிருக்க வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் இப்பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதை எதிர்க்கிறது. அக் கட்சியின் ஹாரிஸ் எம்.பி., போராட்டம் நடத்தியோருக்கு வழங்கிய உறுதிமொழி குறித்து ரணிலிடம் விசாரித்தார். ரணில் அவ்வாறான நிலைப்பாடு எதனையும் தாம் எடுக்கவில்லை எனக்குறிப்பிட்டார். எதிர்பார்த்தபடி எதுவுமே நடக்கவில்லை. விளைவு என்னவாகும்? சுமந்திரன் என்பவரை தனிமனிதனாகவா கருதுவர்? வடக்குத் தலைமை தங்களை ஏமாற்றி விட்டது என்று கிழக்குத் தேசியம் குறித்து பரப்புரை செய்வோரின் வாய்களுக்கு அவல் கிடைத்து விட்டது .

கருணா முஸ்லிம்களுக்கு எதிராகப் பேசினார். கிழக்குத் தேசியம் பேசுவோர் வடக்குத் தலைமையின் துரோகம் பற்றிப் பேசினர். முடிவு தேர்தலில் எதிரொலித்தது. பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது. அதிலும் கூட்டமைப்பைவிட கருணா கூடுதல் வாக்குகள் பெற்றார். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் இந் நிலைமை எதிரொலிக்கும். கருணாவின் துரோகம் மறக்கப்பட்ட விவகாரமாக மாறிவிட்டது. ஆனால் எதுவும் நடக்காதது மாதிரி மாவையால்தான் கட்சிக்குத் தோல்வி என்கிறார் சுமந்திரன்.

அதுமட்டுமல்லாது தேசியப் பட்டியல் ஆசனம் கனடா வரவு குகதாசனுக்கே வழங்க வேண்டும் என சிறீதரனும் , சுமந்திரனும் கட்சித் தலைமையிடம் குறிப்பிட்டனர் என்று காலைக்கதிர் செய்தி வெளியிட்டது. அதேநாள் சிரேஷ்ட சீ. வீ. கே. சிவஞானம் முதலானோர் கட்சித் தலைமைக்கே இதனை வழங்க வேண்டுமென சம்பந்தன் ஐயாவிடம் வேண்டினர். புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் ஆகியோரும் மாவையையே தேசியப் பட்டியல் உறுப்பினராக்க வேண்டும் என்றனர். இதை அறிந்ததும் சிறீதரனும், சுமந்திரனும் தோசையை திருப்பிப் போட்டனர் என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறையின் கலையரசனுக்கு இந்த ஆசனம் வழங்கப்பட்டதாக செயலர் அறிவித்தார். மரியாதைக்கேனும் தமிழரசின் தலைவரிடம் அவர் இவ்விடயத்தைத் தெரிவிக்கவில்லை என அறியமுடிகிறது. மாவை வரக்கூடாது என்பதற்காகவே திடீரென கலையரசனின் நாமத்தைக் குறிப்பிட்டார்களே தவிர, சுமந்திரன் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் செய்ய அல்ல.

தேசியப் பட்டியல் விவகாரத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமக்கு இதற்கும் சம்பந்தம் இல்லை என்ற தொனியில் கருத்துரைத்துள்ளார். இந்த விடயம் குறித்து கட்சியின் செயலாளரே எழுத்து மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தகவல் அனுப்பினார் என்று தனது பொறுப்பிலிருந்து நழுவுகிறார்.

உண்மையில் ஓர் இனத்தின் தலைமைக்குரிய பண்பை சம்பந்தன் ஐயா எப்படி வெளிப்படுத்தியிருக்க வேண்டும்?

சிவஞானத்தின் முன்பாகவே அம்பாறை மாவட்டத்துக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றி சித்தார்த்தனுக்கும், செல்வத்துக்கும் விளக்கியிருக்க வேண்டும். அப்படியானால் மாவைக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பாக அவர் என்ன செய்திருக்க வேண்டும் என்ற வினா எழுகிறது.

மாவை சேனாதிராசா பாராளுமன்றத்திலிருந்து கௌரவமாக விடைபெறும் வாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும். அம்பாறைப் பிரதிநிதியை முற்கூட்டியே சக எம்.பிக்களுக்கு அறிமுகப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கலாம். பாராளுமன்றத்தில் சத்திய பிரமாணம் எடுத்துவிட்டு உரையாற்றும்போது "தமிழர்களின் அடிநாதக் கோரிக்கையான வட,கிழக்கு கோரிக்கையை இப்போதும் நான் வலியுறுத்துகிறேன். உணர்வால் வட, கிழக்கு மக்கள் ஒன்றுபட்டவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக எனது பதவியை ராஜிநாமா செய்கிறேன். எனது இடத்துக்கு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இன்னார் (பெயரைக் குறிப்பிடலாம்) பதவியேற்பார்", எனக் குறிப்பிட்டு விட்டு வெளியேறலாம். தனது ராஜிநாமா கடிதத்தை சபாநாயகருக்கோ, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கோ அனுப்புவதுடன் தேர்தல்கள் ஆணையாளருக்கு உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்திருக்கலாம். பதவியேற்ற நாளன்றே கௌரவமாகப் பதவி விலகுவது இலங்கைக்குப் புதிதன்று. தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா மீண்டும் பதவியேற்று அன்றைய நாளே பதவி விலகியமை ஒரு முன்னுதாரணம்.

ஒரு மூத்த அரசியல் தலைவர் என்ற வகையில், இவர் சக பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து விடைபெறும் தருணம் நெகிழ்ச்சியாக இருந்திருக்கும். வட, கிழக்கு இணைப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சக்திகளுக்கு ஒரு பாடமாக இருந்திருக்கும். கௌரவமாக வழியனுப்பி வைப்பது என்பது சூதும் வஞ்சகமும் நிறைந்த சுமந்திரனுக்கு பழக்கமில்லாததுதானே.

இன அழிப்பு தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக வடக்கு முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஏற்பாடு செய்தவர்தானே இவர். அது மட்டுமல்லாது டெனீஸ்வரனைக் தூண்டிவிட்டு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரை குற்றவாளி கூண்டில் நிற்க வைத்தவர்தானே? அவரைப் பொறுத்தவரை தான்தான் குரங்காட்டி. தான் சொல்வது போல் இந்தக் குரங்குகள் பாய வேண்டும், குத்துக்கரணம் அடிக்கவேண்டும். நாளை தனக்கும் எதுவும் நடக்கலாம் என்பதை இன்று சிறீதரன் உணரவேண்டும்.

எப்படி இருந்தாலும் தமிழினத்தின் சரியான தலைவர் என்று எல்லோரும் பாராட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை சம்பந்தன் ஐயா போட்டுடைத்துவிட்டார். ஒருவேளை மாவை ராஜினாமா செய்யாவிட்டால் என்றொரு கேள்வியும் எழலாம். அதுவும் நியாயமானதே. "பதவியைத் துறக்க தயார் தயார் என்று சொல்லிக்கொண்டே இருக்க வேண்டுமே ஒழிய ஒருபோதும் துறந்து விடக்கூடாது", என அமிர்தலிங்கம் தன்னிடம் கூறினார் என்று தலைவர் பிரபாகரன் ஒரு போராளியிடம் தெரிவித்தார். (அந்த முன்னாள் போராளி இன்னமும் உயிருடன் உள்ளார்) மாவை எவ்வாறு உரையாற்றப் போகிறார் என்ற விடயத்தை மட்டும் தவிர்த்து விட்டு ராஜிநாமா செய்வார் என்பதை மட்டும் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கலாம் .

கடந்தமுறை 58,043 வாக்குகள் பெற்ற சுமந்திரன் இம்முறை இரட்டிப்பாக வாக்குப் பெறுவேன் என மார்தட்டினார். அவருக்கு 27,834 வாக்குகளே கிடைத்தன. அதாவது அரைவாசிக்கும் குறைவு. கடந்தமுறை மருதனார்மடம் கூட்டத்தில் எனது தலைவர் பிரபாகரனே என சம்பந்தர் முன்னிலையில் கூறினார் சிறீதரன். அத்தேர்தலில் 72,058 வாக்குகள் பெற்றார். இம்முறை சுமந்திரன் எமக்குத் தேவை என்றார். முதல் கிடைத்ததில் அரைப்பங்கு கூடக் கிடைக்கவில்லை. (35,884 வாக்குகள்) இந்த வாக்குகள்கூட பெரும்பாலும் தீபன், ஹில்மனை நினைத்தே போடப்பட்டன. சிறீதரனின் துணைவியார், மாமனார்கூட சுமந்திரனுக்கு வாக்களித்திருக்க மாட்டார்கள். பொதுவாக மாவீரர், முன்னாள் போராளிகளின் குடும்பங்களின் நிலைப்பாடு அப்படியாகவே இருந்தது.

எனவே, கிளிநொச்சியில் என்ன நடந்தது என்பதை ஆராயாமலே விடுவோம். முடிவில் சிறீதரன், சுமந்திரன் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர் என அறிவிக்கப்பட்டது.

1981 மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின்போது அமைச்சர்கள் காமினி திஸநாயக்கா, சிறில் மத்தியூ, ஆகியோர் யாழ். சுபாஸ் ஹோட்டலில் தங்கியிருந்தனர். வாக்குப் பெட்டிகள் இந்த ஹோட்டலுக்குக் கொண்டு செல்லப்பட்டன. கட்டுக் கட்டாக வாக்குகள் போடப்பட்டன. சில கட்டுக்களில் "றபர் பாண்ட்" கூட கழற்றப்படவில்லை. இந்தத் தேர்தல் மோசடியாக நடத்தப்பட்டது என இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. உடனே ஜே. ஆர். 10 ஆசனங்களையும் உங்களுக்கே தருகிறோம் என்றார். மகிழ்ச்சியுடன் திரும்பினர் கூட்டணியினர். நீதிமன்றில் தேர்தல் நீதியாக நடத்தப்பட்டது என சத்தியக் கடதாசி தாக்கல் செய்தனர்.

இறுதியில் எனக்குக் கிடைத்தது இந்த மேசை ஒன்றுதான் என சபைத் தலைவர் நடராசா கூறினார்.

அன்றும் தமிழ்த் தலைமை ஜனநாயகத்தை தூக்கில் தொங்க விட்டது. ராஜீவ் கொலை வழக்கில் பேறிவாளன் சாட்சியத்தைப் பதிவு செய்த விசாரணை அதிகாரி ஓய்வு பெற்ற பின் தனது மன சாட்சி உறுத்துகிறது. நான் பிழையாக நடந்துகொண்டேன் என ஊடகங்களுக்கு தெரிவித்தார். எதிர்காலத்தில் 2020 பொதுத் தேர்தல் குறித்தும்...!

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திருமலையில் 2,745, மட்டக்களப்பில் 1,203,அம்பாறையில் 283 வாக்குகளைப் பெற்றது. இந்த வாக்குகள் கிடைத்திருக்காவிடில் தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்திருக்காது. பெயரில்தான் தேசியம் உள்ளது. "டுப்பிளிக்கேட்" தேசியத் தலைவர் (கஜேந்திரகுமார்), திலீபன் (கஜேந்திரன்), மில்லர் (சுகாஷ்) ஆகியோர் இருந்தும் எல்லாச் சிந்தனையும் குடாநாட்டுக்குள்தான்.

மாவையின் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும். அதேவேளை கிழக்கு மாகாண மக்களின் உணர்வுகளையும் புரிந்து கொள்ளவேண்டும். இதில் சரியான முடிவு எடுக்கத் தவறினால் வரலாற்றுத் தவறைப் புரிந்தவர்கள் ஆவோம். கிழக்குத் தேசியம் பேசும் ஞானம், த. கோபாலகிருஷ்ணன், பூபாலரெத்தினம் சீவகன், அழகு குணசீலன், குழந்தைவேல் நவநீதன் போன்றோரின் விஷக் கருத்துக்களை முறியடிக்கும் வகையில் நடவடிக்கை அமைய வேண்டும்.

செய்திகள்



# வடமராட்சியில் வாடி வீடுகள் இனந்தெரியாதோரால் தீக்கிரை

வடமராட்சி, ஒக. 14

யாழ்ப்பாணத்தில் கடல் அட்டை பிடிப்பதற்காக தென்னிலங்கை மீனவர்களால் அமைக்கப்பட்ட 4 வாடி வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

வடமராட்சி - பருத்தித்துறை - தும்பளை பகுதியில் அமைக்கப்பட்ட வாடி வீடுகளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டன.

இந்த வாடி வீடுகளை இரு மாதங்களுக்கு முன்னர் புத்தளம் சிலாவத்தை பகுதியில் இருந்து வந்தவர்கள் அமைத்தனர். அங்கு தங்கியிருந்து கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டவர்கள் தமது சொந்த ஊரின் தேவாலயத்தின் திருநாளுக்கு சென்றிருந்தனர்.

அவர்கள் வாடியில் இல்லாத சந்தர்ப்பத்திலேயே இனந்தெரியாத நபர்களால் அவ்வீடு தீக்கிரையாக்கப்பட்டது. ஊருக்குச் செல்லும் முன்னர், தமது தொழில் உபகரணங்களை பாதுகாப்பாக ஒருவரின் வீட்டில் வைத்துவிட்டுச் சென்றிருந்தனர்.

இதனால், உபகரணங்களுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நெல்லியடியில் சட்டத்தை மீறிய 8 வர்த்தக நிலையங்களுக்கு 'சீல்'

வடமராட்சி, ஒக. 14

நெல்லியடியில் சட்டத்தை மீறும் செயற்பாடுகளிலும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும் நடந்த 8 வர்த்தக நிலையங்களுக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளன.

நெல்லியடி புதிய சந்தை கட்டிட தொகுதியில் இயங்கிய வெளிமாவட்ட வர்த்தகர்களின் கடைகளே இவ்வாறு மூடப்பட்டன.

மூடப்பட்ட கடைகளில், போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அவர்கள் தமக்குள் வாள்வெட்டு மோதல்களிலும் ஈடுபட்டு வந்தனர். அத்துடன், இவர்கள் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் அளிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே, நெல்லியடி பொதுச் சந்தையில் 8 கடைகளிற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. இதில் 7 கடைகள் முஸ்லிம் வியாபாரிகளால் நடத்தப்பட்டு வந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 8 கடைகளும் பிரதேச சபை சட்டங்களிற்கு முரணாக இயங்கி வந்ததுள்ளன. பிரதேச சபையிடம் கடைகளை குத்த கைக்கு பெற்ற உள்ளூர் வர்த்தகர்கள், அவற்றை வெளியிடங்களை சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர்களிற்கு குத்தகைக்கு வழங்கியிருந்தனர். இது பிரதேசசபை சட்ட விதிகளிற்கு முரணானது.

இந்த நிலையில் கரவெட்டி பிரதேசபை தவிசாளர் த.ஐங்கரன் நெல்லியடி புதிய சந்தை வர்த்தக நிலையங்களை ஆய்வு செய்து, இவ்வாறான 7 கடைகளிற்கு சீல் வைக்க உத்தரவிட்டார். அத்துடன், விதிகளிற்கு முரணாக இயங்கிய உள்ளூர் வர்த்தகர் ஒருவருடைய கடையும் சீல் வைக்கப்பட்டது.



எழு தமிழ் நற்பணி மன்றத்தால் 4 பாடசாலைகளை சேர்ந்த 30 மாணவர்களுக்கு ரூபா ஆயிரம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு கிளிநொச்சி கனகாம்பிகை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

# முள்ளிவாய்க்காலில் நேற்று விக்னேஸ்வரன் உறுதியேற்பு

முல்லைத்தீவு, ஒக. 14

தமிழினப் படுகொலையின் குறியீட்டு இடமான முள்ளிவாய்க்கால் மண்ணில் உறுதியேற்று தனது பாராளுமன்ற பயணத்தை ஆரம்பித்தார் வடக்கு முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கட்சியின்சார்பில்க.வி.விக்னேஸ்வரன் வெற்றி பெற்றார். இந்நிலையில் நேற்றைய தினம் அவர் முள்ளிவாய்க்கால் மண்ணில் உறுதியேற்றுக் கொண்டார்.

இனப்படுகொலையான மக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்திய விக்னேஸ்வரன், "இனவிடுதலைப் போராட்டத்தின் பிரதிபலிப்பு இந்த முள்ளிவாய்க்கால். இனப்படுகொலை நடந்ததும் இங்குதான். இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொண்டு எனது பாராளுமன்ற பயணத்தை இங்கிருந்து தொடர்கிறேன்", என்று தெரிவித்தார்.



இந்நிகழ்வில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சக கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க ஒன்றிணைவோம்

## தமிழ் கட்சிகளுக்கு சுரேஷ் அழைப்பு

பாராளுமன்றம் சென்றுள்ள அனைத்து உறுப்பினர்களினதும் முக்கிய கடமையாக இருக்கக் கூடியது தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு நிலத் தொடர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டும். இதனைப் பாதுகாப்பதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

இப்படி அழைப்பு விடுத்திருக்கிறார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளி தலைவரான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான க. வி. விக்னேஸ்வரன் நேற்று முள்ளிவாய்க்காலில் உறுதியேற்றுக் கொண்டார்.

இதன்போது, சக கூட்டணித் தலைவர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், மற்றும் கூட்டணியின் வேட்பாளர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அங்கு கருத்து வெளியிட்ட சுரேஷ் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை எந்தவிதமான பிரியோசனமும் இல்லாத வகையிலும் ஒரு குடும்ப ஆட்சியை நிலைநிறுத்தக் கூடிய வகையிலுமே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மண் எமது கையை விட்டு செல்லக் கூடிய நிலையிலேயே உள்ளது. பாராளுமன்றம் சென்றுள்ள அனைத்து உறுப்பினர்களினதும் முக்கிய கடமையாக இருக்கக் கூடியது தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கு நிலத் தொடர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டும். இதனைப் பாதுகாப்பதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். ஏனென்றால் இப்போது ஆட்சி அமைத்திருக்கின்ற அரசாங்கம் என்பது முழுமையாக சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிறுவக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைந்த பட்சம் இவ்வாறான கொள்கை ரீதியிலாவது இணைந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் தொடர்ந்தும் தனி வழி செல்வோம், தனித்து செயற்படுவோம் என்பது பேச்சளவில் சரியாக இருந்தாலும்கூட செயற்பாட்டளவில் ஒட்டுமொத்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த யாராக இருந்தாலும் சரி வட, கிழக்கின் மண்ணும் இருப்பும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே மிக மிக முக்கியமான விடயமாகும். - என்றார்.

# ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி ஊடாக "இலங்கையில் தமிழும் தமிழரும்" என்ற பொருளில் இணையவழி ஆய்வு மாநாடு இடம்பெறுகிறது.

இதில் இன்று மாலை 4 மணிக்கு கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை மேனாள் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு, இலங்கைத் தமிழர் கூத்து மரபு என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

பங்கேற்க விரும்புவோர் கீழுள்ள முகவரியை பயன்படுத்த முடியும்.

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# யாழ்ப்பாணத்தில் விபசாரம் 2 பெண்கள் உட்பட 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 14

நல்லூர் சுற்றாடலில் உள்ள விடுதி ஒன்றில் விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் நால்வர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் இரு பெண்கள் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் என்றும், இரு இளைஞர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரி வித்தனர்.

அப்பகுதியில் விபசாரம் இடம்பெறுவதாக இரகசிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் குறித்த விடுதியை முற்றுகையிட்டனர்.

அச்சமயம், விடுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த இரண்டு தென்னிலங்கை பெண்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண்கள் 20-25 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் கொழும்பு மற்றும் புத்தளம் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

## பொதுமக்கள் அரசியல்வாதிகளை நெறிப்படுத்த புதிய பொறிமுறை

### தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

தமிழ் மக்கள் பேரவை
Tamil People's Council

கொழும்பு, ஒக. 14

அரசியல் கட்சிகளுக்கிடையேயும் கட்சிக்குள்ளேயும் பல முரண்பாடுகளும் ஜனநாயக விரோத போக்குகளும் தலைதூக்கியிருப்பது வேதனையானது. இதனால் மக்கள் குழப்பமும் கவலையும் அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை விமர்சனம் செய்வதிலும் பார்க்க சுயவிமர்சனம் செய்து தத்தமது நடவடிக்கைகளை நெறிப்படுத்திக் கொள்வது ஆரோக்கியமானதாக அமையும்.

- இவ்வாறு தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் அரசியல்வாதிகளை நெறிப்படுத்தும் பொறிமுறை நோக்கி புதிய யாப்பு ஒன்றை அறிமுகப் படுத்த உள்ளதாகவும் பேரவை அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மக்கள் தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்த மக்கள் தீர்ப்பு மதிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இந்தத் தேர்தலில் எந்தவொரு அணியினருக்கும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அத்துடன் இந்தத் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கிடையேயும் கட்சிக்குள்ளேயும் பல முரண்பாடுகளும் ஜனநாயக விரோதப்போக்குகளும் தலைதூக்கியிருப்பது வேதனையானது. இதனால் மக்கள் குழப்பமும் கவலையும் அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை விமர்சனம் செய்வதிலும் பார்க்க சுயவிமர்சனம் செய்து தத்தமது நடவடிக்கைகளை நெறிப்படுத்திக் கொள்வது ஆரோக்கியமானதாக அமையும்.

தீய நோக்கங்களுக்காக தவறான கருத்துக்கள் பதிவிடப்படுவதும் அவற்றின் உண்மைத்தன்மை அறியாது அவை பகிரப்படுவதும் குழப்பநிலைகள் மேலும் அதிகரிக்க வழிவகுக்கும்.

கருத்துக்கள் பதிவிடப்படும்பொழுது பிறரின் மனம்நோகாது சரியான, நாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் உண்மையை எழுதிக்கொள்வது தமிழரின் மரபுக்கு வலுச்சேர்க்கும்.

ஒருவரிலே பழி தீர்ப்பதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது அறம் ஆகாது. இவை சமூகங்களுக்கிடையே பிரிவினையை வளர்த்துக்கொள்வதற்கே வழிவகுக்கும்.

சமூக ஒற்றுமை என்பது தேசியத்தின் அடிநாதம். ஒற்றுமையில்லாது வெறுப்புக்கள் நீரூற்றி வளர்க்கப்படின் தேசியம் மடிந்து போகும் ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றலாம். ஒரு சமூகம் அங்கு நடைபெறும் நல்ல விடயங்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துமாயின், அது வளர்ச்சி பெறுவதுடன் ஒற்றுமையும் மேலோங்கும். எதையும் சந்தேகக் கண்ணுடன் நோக்கி தீய சம்பவங்களை மட்டுமே வடித்தெடுத்து அநாகரிகமாக விமர்சிப்பது பிரிவுகளை ஆழமாக்கும்.

காலத்தின் தேவைகருதி தமிழ்மக்கள் பேரவையானது தமக்கென ஒருபுதிய யாப்பினை அறிமுகம் செய்யவிருக்கின்றது. இது தேர்தல் அரசியல் கடந்து தமிழ்மக்களின் ஒற்றுமைக்கும் அவர்களின் வேணவாக்களை வென்றெடுப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் வழிசமைக்கும்.

இந்த முயற்சியிலே பொது அமைப்புக்களினதும், பொதுமக்களினதும் பெரும் பங்களிப்பு எதிர்பார்க் கப்படுகின்றது.

பொதுமக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் ஒரு பொறிமுறை நோக்கி நகர முயற்சி எடுக்க தமிழ்மக் களை அணிதிரள அழைக்கின்றோம் - என்றுள்ளது.

# கூட்டமைப்பின் கோட்டையை நாம் கைப்பற்றி விட்டோம்

## பெருமிதம் கொள்கிறார் மஹிந்த



கொழும்பு, ஒக. 14

**"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையாக விளங்கிய வடக்கு, கிழக்கை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் கைப்பற்றிவிட்டோம். கூட்டமைப்பைவிட அதிக ஆசனங்களைப் பெற்றுத் தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம்."**

**- இவ்வாறு பெருமிதம் பொங்கத் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.**

பிரதமராக நான்காவது தடவையாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"வடக்கு, கிழக்கிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 9 ஆசனங்களை மட்டும் பெற்றுள்ளது. ஆனால், அங்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும் இணைந்து 11 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

அதாவது யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தலா 2 ஆசனங்கள் வீதம் 6 ஆசனங்களையும், அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களையும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும் நாம் இலகுவாகக் கைப்பற்றியுள்ளோம்.

மட்டக்களப்பில் பிள்ளையான் சிறைக்குள் இருந்துகொண்டே அம்மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார் என்பது விசேட அம்சமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையை நாம் கைப்பற்றியதன் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம் என்பது நிரூபணமாகியுள்ளது.

கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். அவர்கள் எம்மை நம்புகின்றனர். எனவே, அவர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனியாவது திருந்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நீரோட்டத்தில் இருக்காமல் நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும்" - என தெரிவித்துள்ளார்.

## தலைமையில் மாற்றம் இப்போது அவசியமில்லை

### பின்வாங்குகிறார் சிறீதரன்



கிளிநொச்சி, ஒக. 14

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தமைக்காக கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து அவர் விலக வேண்டும் என்ற அவசியமெதுவும் இல்லை. தேர்தல் முடிவடைந்தவுடன் பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது வழமையானதாகும்.

எனவே, கட்சியின் தலைமைத்துவத்தில் உடனடியாக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக நான் கருதவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரன் தெரிவித்தார்.

2020 ஒகஸ்ட் 5 பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் 10 ஆசனங்களையே பெற்றிருக்கிறது. கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலில் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்திருக்கிறது என்பதுடன் கூட்டமைப்பிற்குள் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விமர்சனங்களும் அரசியல் அவதானிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா பாராளுமன்றத்திற்குத் தெரிவாகாத நிலையில், அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற சி.சிறிதரனை கட்சியின் தலைவராக நியமிக்க வேண்டும் என்ற கருத்து ஒரு சாராரால் வலியுறுத்தப்பட்டது.

அவரும் தான் தலைமைப் பதவியை ஏற்கத் தயார் என்று கூறியிருந்தார். இந்த விடயம் மற்றொரு சாரால் மட்டுமின்றி கட்சியின் மூத்த தலைவர்கள் மத்தியிலும் கடும் சினத்தை ஏற்படுத்தியது.

இது தொடர்பில் சிறிதரனின் நிலைப்பாடு என்னவென்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் பல்வேறு தரப்பினரும் வெவ்வேறு விமர்சனங்களை முன்வைப்பார்கள் என்று சுட்டிக்காட்டிய அவர், அதற்கான உடனடியாகக் கட்சிக்குள் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

## முள்ளிவாய்க்காலில் நாளை முன்னணியினர் உறுதியேற்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை சனிக்கிழமை முள்ளிவாய்க்காலில் உறுதிப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் இருவர் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றனர். அக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமனறம் செல்லும் இவர்கள், நாளை சனிக் கிழமை தமிழினப் படுகொலையின் குறியீட்டு இடமான முள்ளி வாயக்காலில் உறுதிப் பிர மாணம் எடுக்கவுள்ள னர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், ஆதரவாளர்கள், கட்சி உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## அமைச்சரவையின் கன்னிக்கூட்டம்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இதனால் வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பொறுப்பேற்றல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. 25, அமைச்சுக்கள். 39 இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் 24 மாவட்டங்களுக்கான குழு தலைவர் பதவிகளுக்கான நியமனங்கள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டன.

புதிய அமைச்சரவையின் கன்னி கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது. வழமைக்கு மாற்றீடாக பல புதிய அம்சங்கள் முதலாவது அமைச்சரவையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

9வது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர் வரும் வியாழக்கிழமை 20 ஆம் திகதி கூடவுள்ளது. சபா நாயக்கர் மற்றும் பிரதி சபாநாயக்கர் ஆகிய முக்கிய பதவிகள் குறித்து அன்றையதினம் தீர்மானம் எடுக்கப் படும். சபாநாயகர் பதவிக்கு பல்வேறு தரப்பினரது பெயர்கள் இதுவரையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : பத்துக்கு பத்து ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
விஜய், ஹன்சிகா மற்றும் ஜெனிலியா நடிப்பில் வேலாயுதம்




கமல்ஹாசன் நடிப்பில் விஸ்வரூபம்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : நல்லூர் உற்சவம் நேரலை
6.30 மணி : சோட் ப்லிம்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக் காலம்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி மற்றும் செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Television ஈழம்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் யோகிபாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 20ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு



10.00 மணி : நல்லூர் கந்தன் 21 ஆம் நாள் காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்

**பகல்**
12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 21 ஆம் நாள் மாலைத் திருவிழா நேரலை

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : நல்லூர் கந்தன் 21ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television


**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு




11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.08.2020 அன்று வெளியிடப்பட்டது.